ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/33 - 2025 ජූලි මස 01 වැනි අඟහරුවාදා - 2025.07.01

2443/33 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/HAR/4/2/1/60.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2021/
WS/423.

கண்டி வடக்கு - பாததும்பர ஒன்றிணைந்த நீர் விநியோக திட்டத்தின் கீழான உடுவாவல சேவை தடாகத்தின் பக்க அணைக்கட்டு அமைக்க வேண்டிய தான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவின் குழுகம்மன சியபத்து சிறு பிரிவின் இலக்கம் 417, உடுவாவல மேற்கு கிராம அலுவலர் பிரிவின் உடுவாவல கிராமத்தில் அமைந் துள்ள கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 320320 கொண்ட கடத்திரல் வரைபடத்தில் பிரிவு இலக்கம் 02 இல் பத்திர இலக்கம் 12 இல் இ.வி.லே 1 இல் துண்டு இலக்கம் 3,4 எனக் காணப்படுகின்ற கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு:

1. **துண்டு இல. 3 - காணியின் பெயர்: கலஹிடியாவே வத்த; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கட்டுகஸ்தொட்ட, உடுவாவல, இலக்கம் 19/1 இல் குடியிருக்கும் சஞ்ஜீவ அமரனாத் மனம்பேரி; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இலக்கம் 1, 2 மற்றும் 5; கிழக்கு: துண்டு இலக்கம் 5 மற்றும் 4; தெற்கு: பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 76; மேற்கு: துண்டு இலக்கம் 1.

2. **துண்டு இல. 4 - காணியின் பெயர்: கலஹிடியாவே வத்த; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கட்டுகஸ்தொட்ட,**

**உடுவாவல, இலக்கம் 23/3 இல் குடியிருக்கும் இகலவத்தே கெதர லீலாவதி; விஸ்தீரணம்: 0.0028 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இலக்கம் 2, 5 மற்றும் 6; கிழக்கு: துண்டு இலக்கம் 6; தெற்கு: பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 75 மற்றும் 76; மேற்கு: பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 76, இந்த வரைபடத்தில் துண்டு இலக்கம் 3 மற்றும் 2.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மொஹான் தர்மதாஸ,
பிரதேச செயலாளர்
ஹாரிஸ்பத்துவ
பிரதேச செயலாளர் பிரிவு.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ.
2025, யூன் 26.

EOG 07 - 0008

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/HAR/4/2/1/53.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் குறிப்பு இல.: 4-3/12/2018/ WS/291.

குண்டசாலை - ஹாரகம நீர் விநியோக திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட தொட்டி அமைக்க வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவின் குழுகம்மன சியபத்து சிறு பிரிவின் இலக்கம் 421, வேகிரிய கிராம அலுவலர் பிரிவின் வேகிரிய கிராமத்தில் அமைந்துள்ள கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 320460 கொண்ட கடத்திரல் வரைபடத்தில் பிரிவு இலக்கம் 03 இல் பத்திர இலக்கம் 7 இல் இ.வி.லே 1 இல் துண்டு இலக்கம் 1 எனக் காணப்படுகின்ற கீழ் விபரிக்கப் பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 1 - காணியின் பெயர்: லூலேலிவலேகும்புர; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: விகாராதிபதி, லியன்கஸ் தென்ன இராஜமகா விகாரை; விஸ்தீரணம்: 0.4111 ஹெக்டயார்.**

வடக்கு: பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 36; கிழக்கு: பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 36 மற்றும் ஆ.வ. மக 5380 இல் துண்டு இலக்கம் 2; தெற்கு: ஆ.வ. மக 5380 இல் துண்டு இலக்கம் 2 மற்றும் பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 112; மேற்கு: பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 112 மற்றும் 208.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மொஹான் தர்மதாஸ,
பிரதேச செயலாளர்
ஹாரிஸ்பத்துவ
பிரதேச செயலாளர் பிரிவு.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ.
2025, யூன் 26.

EOG 07 - 0009

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.